Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

RS Polyclinic

குடியரசு துணைத் தலைவரும், மாநிலங்களவையின் தலைவருமான சி பி ராதாகிருஷ்ணன், ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் வெளியுறவுக் குழுவின் தூதுக்குழு பிரதிநிதிகளுடன் சந்திப்பு

சென்னை 29, அக்டோபர் 2026: குடியரசு துணைத் தலைவரும், மாநிலங் களவையின் தலைவரு மான திரு சி பி ராதா கிருஷ்ணன், ஐரோப் பிய நாடாளுமன்றத் தின் வெளியுறவுக் குழுவின் தூதுக்குழுப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசினார்.

திரு டேவிட் மெக் அலிஸ்டர் தலைமை யிலான இந்தத் தூதுக் குழுவிகருடன் புது தில்லியில் உள்ள நாடாளுமன்ற வளாகத் தில் நடைபெற்ற இந்த சந்திப்பின்போது, கடந்த சில ஆண்டு களில் இந்தியா-ஐரோப்பிய யூனியன் இடையேயான உறவு கள் பல்வேறு துறை களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டுள்ளதாகக் குறிப்பிட்ட குடியரசு துணைத் தலைவர், இ ந்த நல்லுறவை முன்னெடுத்துச் சென்ற தற்காக இந்தியா - ஐரோப்பிய யூனியனின் தலைவர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

இந்த நட்புறவின் பொதுவான அடித்தளம் குறித்து வலியுறுத்திய அவர், உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடுகளாகவும், வெளிப் படையான சந்தைப் பொருளாதாரங்களைக் கொண்டவையாகவும், பன்முகத்தன்மை சமூகங்களைக் கொண் டவையாகவும் திகழும் இந்தியாவும், ஐரோப் பிய யூனியன் நாடு களும், ஒரு வலுவான, பன்முனை உலக ஒழுங்கை ளுருவாக்கு வதில் பொதுவான ஆர்வத்தைக் கொண் டுள்ளன என்று குறிப் பிட்டார். ஐரோப்பிய ஆணையத் தலைவர்கள் குழு, அதன் தலைவர் திருமதி உர்சுலா வான் டெர் லேயன் தலைமை யில், ஒட்டுமொத்த அரசு நிர்வாக அணுகு முறையுடன் மேற் கொண்ட பயணத் திற்குப் பிறகு ஏற்படுத் தப்பட்ட நிறுவன ரீதியான பிணைப்புகள், பயனுள்ள முடிவுகளை அளித்துள்ளன என்று அவர் கூறினார்.

ஐ « ர £ ப் பி ய கவுன்சில் தலைவர் மற்றும் ஐரோப்பிய ஆணையத் தலைவர் ஆகியோர் இந்தியக் குடியரசு தின விழாவில் கௌரவ விருந்தினர் களாகப் பங்கேற்றதை அவர் நினைவுகூர்ந்தார். 16-வது இந்தியா-ஐரோப்பிய யூனியன் உச்சிமாநாட்டிற்காக அவர்கள் மேற் கொண்ட அரசுமுறைப் பயணம், இந்த இரு தரப்பு உறவிற்கு மிகப் பெரிய உத்வேகத்தை அளித்துள்ளது என்று அவர் தெரிவித்தார்.

வர்த்தகம், முதலீடு குறித்துக் குறிப்பிட்ட குடியரசு துணைத் தலைவர், இந்தியாவும் ஐரோப் பிய யூனியனும் இணை ந்து, 25 டிரில்லியன் அமெரிக்க டாலர் மதிப் பிலான சந்தையையும், ஏறக் குறைய இரண்டு பில்லியன் மக்கள் தொகையையும் கொண்டுள்ளன என்று தெரிவித்தார்.